| 9 - ஆம் வகுப்பு | அரையாண்டுத் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 2:30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100 |

## பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **15 x 1 = 15**

1. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி_____
   அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை
2. உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை_____
   அ) கூவல் ஆ) கண்மாய் இ) அகழி ஈ) ஊருணி
3. தமிழ்விடுதூது _______ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
4. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
5. கீழ்க்காண்பனவற்றுள் சங்ககாலப் பெண்பாற்புலவர்களின் சரியான குழுவினைக் கண்டறிக.
   அ) நக்கண்ணையார், ஒக்கூர் மாசாத்தியார், நப்பசலையார், பண்டித ரமாபாய்
   ஆ) நப்பசலையார், பொன்முடியார், நீலாம்பிகை அம்மையார், ஔவையார்
   இ) நக்கண்ணையார், ஒக்கூர் மாசாத்தியார், பொன்முடியார், ஔவையார்
   ஈ) நக்கண்ணையார், ஒக்கூர் மாசாத்தியார், நப்பசலையார், மூவலூர் இராமாமிர்தம்
6. 'இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது' என்று குறிப்பிட்டவர் _____
   அ) ச.அகத்தியலிங்கம் ஆ) கால்டுவெல் இ) குமரிலபட்டர் ஈ) மாக்ஸ்முல்லர்
7. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும் என்பதற்கான எடுத்துக்காட்டு _____
   அ) தனிச் சிறப்பு ஆ) தைத்திங்கள் இ) வடக்குப் பக்கம் ஈ) நிலாச்சோறு
8. 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்று அழைக்கப்படுபவர்_______
   அ) மணிமேகலை ஆ) கண்ணகி இ) ஆண்டாள் ஈ) ஔவையார்
9. தீரா இடும்பை தருவது எது?
   அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
   இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
10. "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
    இரண்டறிவதுவே அதனொடு நாவே" - இவ்வடிகளில் அதனோடு என்பது எதைக் குறிக்கிறது?
    அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்
11. தோரண வீதியும், தோமறு கோட்டியும் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் _________
    அ) ஏவல் வினைமுற்று ஆ) வினைத்தொகை இ) எண்ணும்மை ஈ) பண்புத்தொகை

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்*
*துன்னும் மேதி படியத் துதைந்தெழும்*
*கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன*
*மன்னு வான்மிசை வானவில் போலுமால்*

12. இப்பாடலின் ஆசிரியர் ______
    அ) சேக்கிழார் ஆ) புலவர் குழந்தை இ) ஆண்டாள் ஈ) தமிழன்பன்
13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் _____
    அ) தமிழ்விடுதூது ஆ) மார்கழி பெருவிழா இ) பெரியபுராணம் ஈ) இராவணகாவியம்
14. 'மேதி' என்னும் சொல்லின் பொருள் ______
    அ) வாளைமீன் ஆ) எருமை இ) காளை ஈ) தென்னை
15. இப்பாட்லில் இடம்பெற்றுள்ள அடிஎதுகையை எடுத்து எழுதுக.
    அ) கன்னி - போலுமால் ஆ) மன்னு - பாய்வன
    இ) வான்மிசை - கமுகின் ஈ) அன்னம் - துன்னும்



Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

**பகுதி - II பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**
**வினா எண்: 21 கட்டாயமாக விடையளிக்கவும்** **4 x 2 = 8**

16. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
17. விடைக்கேற்ற வினா அமைக்க:
    அ) சங்க இலக்கியமான கலித்தொகையில் ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
    ஆ) உலக அளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமாரா நூலகம் ஆகும்.
18. 'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
    காடும் உடையது அரண்' - இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?
19. பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும் என்பதைக் 'குடும்ப விளக்கு' கருத்தின் வழி எழுதுக.
20. நடுகல் என்றால் என்ன?
21. 'தலை' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **5 x 2 = 10**

22. 'கொடு' என்பது முதல்வினையாகவும் துணைவினையாகவும் அமையுமாறு தொடர்கள் எழுதுக.
23. தொடரைப் பழமொழி கொண்டு நிரப்புக:
    அ) கற்றோருக்குச் சென்ற ________ ஆ) இளமையில் கல்வி ________
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக: 'பூக்கும்'.
25. படிப்போம்; பயன்படுத்துவோம்!
    (அ) Tropical Zone
    (ஆ) Social Reformer
26. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
27. மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
    அ) மேலும் கீழும்
    ஆ) கேளிக்கையும் வேடிக்கையும்
28. பிழை நீக்கி எழுதுக.
    அ) பவளவிழிதான் பரிசு உரியவள்.
    ஆ) துன்பத்தால் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.

**பகுதி - III பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 3 = 6**

29. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.
30. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.**

    உலகின் குறிப்பிடத்தக்க, பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ - ஹரப்பா அகழாய்வுக்குப் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் 'திராவிட நாகரிகம்' என்று சுனிதி குமார், ஐராவதம் மகாதேவன் முதலான அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது. திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர். தமிழ் என்னும் சொல்லில் இருந்துதான் திராவிடா என்னும் சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

    (அ) திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் யார்?
    (ஆ) திராவிடம் என்னும் சொல் எந்த மொழியிலிருந்து பிறந்தது?
    (இ) உலகின் பழைமையான நாகரிகம் எது?
31. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**
**[வினா எண்: 34 கட்டாயமாக விடையளிக்கவும்]** **2 x 3 = 6**

32. திருப்பாவை குறிப்பிடும் காலை வழிபாட்டு நிகழ்வை விளக்குக.
33. தமிழ்விடுதூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக.



Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) 'நீர் இன்று அமையா' எனத் தொடங்கும் புறநானூறுப் பாடல்

**(அல்லது)**

(ஆ) 'ஒன்றறிவதுவே' எனத் தொடங்கும் உயிர்வகைப் பாடல்

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 3 = 6**

35. அளவைபாகு பெயர்களின் வகைகளை விளக்குக.

36. 'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை' - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

37. எண்ணுப்பெயர், திசைப்பெயர்களில் வல்லினம் மிகுந்து வருவதைச் சான்றுடன் எழுதுக.

**பகுதி - IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. (அ) இராவண காவியத்தின் வழியே குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வையும், மருத நிலத்தின் அழகையும் புலவர் குழந்தை எங்ஙனம் காட்சிப்படுத்துகிறார்?

**(அல்லது)**

(ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

39. (அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

(ஆ) உங்கள் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய "கால்முளைத்த கதைகள்" (ஆசிரியர் எஸ்.ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. தமிழினியன் என்பவர் இராமநாதபுரம் அஞ்சலகத்தில் தனது சேமிப்பு கணக்கில் ரூ. 10000/- ஐ சேமித்து வைத்து உள்ளார். தனது செலவிற்காக அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ 5000/- ஐப் பெற விரும்புகிறார். தேர்வர் தன்னைத் தமிழினியனாகக் கருதி கொடுக்கப்பட்டுள்ள பணம் பெறும் படிவத்தை நிரப்புக.

42. அ) உங்கள் வாழ்வில் உங்களை மகிழச் செய்த பணிகள் ஐந்தினை எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழில் மொழிபெயர்க்க.

i) A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi.

ii) The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru.

iii) The biggest problem is the lack of love and charity - Mother Teresa.

iv) You have to dream before your dreams can come true - A.P.J Abdul Kalam.

v) Winners don't do different things; they do things differently - Shiv Khera.

**பகுதி - V**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. (அ) காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.

**(அல்லது)**

(ஆ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.



Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

44. (அ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

**(அல்லது)**

(ஆ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

45. (அ) குறிப்புகளைக் கொண்டு "கல்வியில் சிறந்த பெண்கள்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்புகள்: முன்னுரை - சங்ககால பெண்பாற்புலவர்கள் - பெண்மை துணிவு - பெண்மை அறிவு - பெண்மை புரட்சி - பெண்மை உயர்வு - முடிவுரை.

**(அல்லது)**

(ஆ) வரவேற்பு மடல் எழுதுக.

சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்குக் வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.



Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com